*4*

# கோபமான சிந்தனைகள், வெறுப்பு நிறைந்த வார்த்தைகள் மற்றும் கொலை

## (மத்தேயு 5:21-26)

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, ஆக்லஹாமாவின் ஹோமினி என்ற இடத்திற்கு அருகில் உள்ள கோன்னெர்ஸ் திருத்தும் மையத்தில் நான் பிரசங்கித்தேன். எனது உரையைக் கேட்டவர்களில் பலர், கொலைக்குற்றம் செய்து தண்டனை பெற்றவர்களாக இருந்தனர். அது ஒரு ஆர்வமிக்க அனுபவமாக இருந்தது; ஆனால் பல ஞாயிற்றுக்கிழமைகளில் நான், டஜன் கணக்கிலான கொலைகாரர்களுக்குப் பிரசங்கித்தேன். கோன்னெர்ஸில் எனது உரையைக் கேட்டவர்களில் சிலர் தங்கள் கைகளினால் கொலை செய்தவர்களாக இருந்தனர்; மற்ற குழுக்களில் பலர் தங்கள் இருதயங்களிலும் தங்கள் வார்த்தைகளைக் கொண்டும் கொலை செய்தவர்களாக இருந்தனர். இயேசுவைப் பொறுத்த மட்டில், இந்த இரண்டாவது குழுவில் உள்ளவர்கள் முதலாவது குழுவில் உள்ளவர்களைப் போன்றே குற்றம் செய்தவர்களாக இருக்கின்றனர்:

> கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. எதிராளி உன்னை நியாயாதிபதினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து. பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும்

*அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:21-26).*

*நமது முந்திய பாடத்தில் நாம், "புதிய ஏற்பாடு முழுவதிலும் மிகவும் முக்கியமான பகுதிகளில் ஒன்று"[1] என வில்லியம் பார்க்களே குறிப்பிட்ட முன்னுரையைப் படித்தோம்: மத்தேயு 5:21-48. அந்தப் படிப்பில், இயேசு நியாயப்பிரமாணத்தை அழிப்பதற்கு அல்ல ஆனால் அதை நிறைவேற்றவே தாம் வந்ததாகக் கூறினார் என்று நாம் குறிப்பிட்டோம். அவர் நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்த போது அதை முற்றிலுமாக அவர் நிறைவேற்றி அதைப் புறம்பே எடுத்துப் போட்டார். இருப்பினும் மலைப்பிரசங்கத்தில் அவர் அதை விரிவாக்கி அதற்கு மிக ஆழமான அர்த்தத்தைக் கொடுத்தார். அவர் தமது திறவு வார்த்தைகளுக்குப் பின்பு, அந்த நிறைவேற்றத்திற்கு ஐந்து அல்லது ஆறு விவரிப்புகளைக் கொடுத்தார். இந்த எடுத்துரைப்பில் நாம் 21முதல் 24வரையிலான வசனங்களில் முதலாவது விவரிப்பைப் பற்றிப் படிப்போம். இவ்வசனப் பகுதியில் இயேசு, கோபம் கொள்ளுதல் பற்றியும் நாம் கூறக்கூடாத வார்த்தைகளைப் பற்றியும் பேசினார்.*

*நமது வேதபாட வசனப் பகுதி, நாம் மற்றவர்களுடன் இசைவிணக்கமாக இல்லாதபோது, குறிப்பாக நாம் நமது வார்த்தைகளினாலும் செயல்களினாலும் மற்றவர்களைக் குற்றப்படுத்தி இருக்கும் போது செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றியும் கலந்துரையாடுகிறது. உலகமானது, கருத்து ஒருமைப்பாடு இல்லாத நிலையைக் கையாளுவதற்குத் தனது சொந்த வழிகளைக் கொண்டுள்ளது, ஆனால் அவைகள் இயேசுவைப் பின்பற்றுபவர்களின் வழிகள் அல்ல. மற்ற மக்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவரல்லாதவர்களாக இருந்தாலும், விசுவாசிகளாக இருந்தாலும் அல்லது அவிசுவாசிகளாக இருந்தாலும் நண்பர்களாக இருந்தாலும் அல்லது எதிராளிகளாக இருந்தாலும், ஒரு கிறிஸ்தவர் எல்லா மக்களுடனும் இசைவிணக்கமாக இருக்க முயற்சி செய்கிறார்.*

## *கோபத்தின் அபாயம் (5:21, 22)*

***உணரப்பட்ட கோபம் (வசனங்கள் 21, 22அ)***

*இவ்வசனப்பகுதி, "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு[2] உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்." என்ற இயேசுவின் கூற்றுடன் தொடங்குகிறது (வசனம் 21). "பூர்வத்தார்" என்பவர்கள் இயேசுவின் உரையைக் கேட்டவர்களின் முன்னோர்களாக இருந்தனர்.*

*"கொலை செய்யாதிருப்பாயாக" என்பது கிறிஸ்துவின் உரையைக் கேட்டவர்கள் கேள்விப்பட்டிருந்த விஷயங்களில் ஒன்றாக இருந்தது. இது பத்துக் கட்டளைகளில் ஆறாவது கட்டளையாக இருந்தது (யாத்திராகமம் 20:13; உபாகமம் 5:17). ஆறாவது கட்டளை, மரண தண்டனையையோ (காண்க யாத்திராகமம் 21:12) அல்லது கர்த்தரின் விரோதிகளுக்கு எதிராக யுத்தத்திற்குச் செல்லுவதையோ கூட (காண்க உபாகமம் 7) தடைசெய்யவில்லை. "கொலை செய்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (NASB வேதாகமம்*

சுட்டிகாண்பிக்கிறபடி) "கொலை செய்ய" என்று அர்த்தப்படுகிற (*phoneuo* என்ற) வார்த்தையில் இருந்து வருகிறது.[3] "கொலை" என்பது, "ஒரு மனிதன் மற்றொரு மனிதனால் [குறிப்பாக] முன்பே எண்ணப்பட்ட விரோதத்துடன் சட்டவிரோதமாகக் கொல்லப்படுதல்" என்பதாக உள்ளது.[4]

"கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்றும் மக்கள் கேள்விப்பட்டு இருந்தனர். ["நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்பது "shall be liable to the court" என்று NKJV வேதாகமத்தில் உள்ளது.] "Court" என்பது "முடிவு நியாயத்தீர்ப்பு"[5] என்று அர்த்தப்படுகிற (*krisis* என்ற) வார்த்தையில் இருந்து வந்துள்ளது (KJV வேதாகமத்தில் காண்க). இயேசு, ஒரு கொலைகாரரை ஒரு யூதத்துவ நீதிமன்றத்தின் முன் கொண்டுவந்து தீர்ப்புச் செய்து தண்டணை அளித்தலைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார்.[6] பழைய ஏற்பாட்டின் எந்த வசனமும், "கொலை செய்கிறவர் நீதிமன்றத்திற்குப் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருப்பார்" என்று கூறுவதில்லை; இந்தக் கூற்றானது அனேகமாக, பழைய ஏற்பாட்டின் பல வசனப்பகுதிகளில் போதிக்கப்பட்ட ஒரு கொள்கையில் அடிப்படையில் அமைந்திருக்கலாம். கொலைசெய்தவர்கள் மரணத்திற்கு உள்ளாக்கப்படவேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியது (காண்க லேவியராகமம் 24:17; எண்ணாகமம் 35:16-34) மற்றும் இஸ்ரவேல் மக்கள் இதையும் இது தொடர்பான மற்ற விஷயங்களையும் கையாள்வதற்கு ஒரு நீதிமன்ற முறைமையை ஒருங்கமைக்க வேண்டும் என்று அது சுட்டிக்காண்பித்தது (காண்க உபாகமம் 16:18; 17:8, 9). இயேசுவின் நாட்களில், பலஸ்தீனத்தில் இருந்த ஒவ்வொரு சிறு நகரிலும் மற்றும் நகரத்திலும், கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்க ஒரு நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. யூதத்துவ போதகர்கள், உண்மையில் கொலை செய்தவர்கள் மாத்திரமே குற்றப்பட்டு இருந்தனர் என்று போதித்தனர்.

"ஆனால்" (இங்கு ஒரு திறவுகோல் சொற்றொடர் வருகிறது) "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ..." என்று இயேசு கூடுதலாகக் கூறினார் (மத்தேயு 5:22அ). கிரேக்க வசனத்தில் "நான்" என்ற வார்த்தைக்கு வலியுறுத்தம் உள்ளது. வேதபாரகர்களும் பரிசேயர்களும் தாங்கள் போதிக்கையில் - சில வேளைகளில் மோசேயை, ஆனால் அடிக்கடி கடந்த காலத்தில் இருந்த பல அதிகாரிகளை - மேற்கோள் காண்பித்தனர். இருப்பினும் இயேசு தமது சொந்த அதிகாரத்தின் மீது பேசினார். அவரது பிரசங்கத்தின் முடிவில், "இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" (7:28, 29; காண்க மாற்கு 1:22).

இயேசு தமது சொந்த அதிகாரத்தின் மீதான அடிப்படையில் ஏற்படுத்திய அறிவிப்பு என்ன? முதலில் அவர், "தன் சகோதரனை[7] நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்று கூறினார் (மத்தேயு 5:22ஆ). இயேசு "சகோதரனை" (*adelphos*) என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியபோது, அவரது உரையைக் கேட்டவர்கள் சக யூதர்களைப் பற்றி நினைத்திருப்பார்கள் என்பது உறுதி. இன்றைய நாட்களில் நாம், அனேகமாக முதலில் சக கிறிஸ்தவர்களைப் பற்றி நினைக்கலாம். இருப்பினும் இதன் நடைமுறைப் பயன்பாடு இன்னும் விரிவானதாக உள்ளது

*என்பது உறுதி. 24ம் வசனத்தில் இயேசு, எதிராளிகளை உள்ளடக்கினார், எனவே நாம் தொடர்புகொள்ளும் எவரொருவரையும் மற்றும் ஒவ்வொருவரையும் பற்றி நினைக்க வேண்டும்.*

*"கோபித்துக்கொள்பவன்" என்பது orge என்ற சொல்லின் வினை வடிவத்தில் இருந்து வந்துள்ளது. "கோபம்" என்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் உள்ளன: orge மற்றும் thumos என்பவை. Thumos என்பது "விரைவில் பற்றி எரிதலாகவும் விரைவில் அடங்கிப்போவதாகவும்" இருக்கையில், orge என்பது "மிக அதிகமாக நிலைநிற்கும் மனநிலையையும் அடிக்கடி பழிவாங்குதலைக் கண்ணோக்கும் நிலையையும்" குறிப்பதாக உள்ளது.[8] Orge என்பதைப் பற்றி பார்க்ளே என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

> *இது நீண்ட நாள் நிலைத்திருக்கும் கோபமாக உள்ளது; இது தனது கோபத்தைச் சூடாகக் காத்திருக்க அதைப் போஷிக்கும் மனிதரின் கோபமாக உள்ளது; இது ஒரு நபர் தொடர்ந்து நினைத்துக் கொண்டே இருந்து அதை இறந்த போக அவர் அனுமதிக்காத கோபமாக உள்ளது ... [இது] மறக்காத கோபமாக, ஆற்றுப்படுத்த மறுக்கிற கோபமாக, பழிவாங்குதலை நாடுகிற கோபமாக உள்ளது.[9]*

*வேதாகமம் எல்லாக் கோபத்தையும் கண்டனம் பண்ணுவதில்லை. தேவன் துன்மார்க்கர் மீது கோபமாக இருக்கிறார் (காண்க சங்கீதம் 7:11). இயேசு, மாய்மாலமான பரிசேயர்களைக் கோபத்துடன் கண்ணோக்கினார் (மாற்கு 3:5). நீதியான கோபம் - தேவபக்திக்கேற்ற கோபம் - பாவம், அடக்குமுறை மற்றும் பொல்லாங்கு ஆகியவற்றிற்கு எதிரான கோபம் உள்ளது. நல்ல நோக்கத்திற்காகவே தேவன் நமக்குள் கோபம் கொள்வதற்கான திறனை வைத்திருக்கிறார். வில்லியம் இவான்ஸ் என்பவர், "பாவத்தின் மீது கோபம் கொள்ள இயலாதிருக்கிற ஒரு மனிதர் ... நீதியின் மீது உண்மையான அன்புகூரவும் இயலாதவராக இருக்கிறார்" என்று எழுதினார்.[10] இருப்பினும் நம்மில் பெரும்பான்மையானவர்கள் கோபம் கொள்ளும்போது, அது நீதியான கோபமாக இருப்பதில்லை. மாறாக அது, உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட தனிப்பட்ட வகையிலான முக்கியத்துவமற்ற அல்லது புண்படுத்துதல் சிலவற்றின் மீதான சுயநலமான கோபமாக உள்ளது. விஷயம் இப்படி இருப்பதால், வேதாகமம் பொதுவாகக் கோபத்தைப் பழித்துரைக்கிறது (காண்க எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8; யாக்கோபு 1:19, 20).*

*நமது வேதபாட வசனப்பகுதியில் KJV வேதாகமம் சற்றே மாறுபாடு கொண்டுள்ளது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். வேதாகமத்தில் "angry ... without a cause" என்றுள்ளது. [இதுவே தமிழ் வேதாமத்தில் ''நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] ''நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை பழங்காலப் பதிவுகள் பலவற்றில் உள்ளது, ஆனால் இது தொடக்ககாலக் கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுவதில்லை.[11] நான் இளைஞனாக இருந்தபோது, ''நியாயமில்லாமல்'' என்பதைச் சிலர் தங்கள் கோபத்தை நியாயப்படுத்துவதற்காகப் பயன்படுத்தியதைக் கேள்விப்பட்டதால் இதைக் குறிப்பிடுகிறேன். "அது 'நியாயமில்லமாமல்' என்று கூறுகிறது, ஆனால் நான்*

ஒரு நியாயத்தைக் கொண்டிருந்தேன்! அவர் எனக்கு என்ன செய்தார் என்பதை உங்களுக்குக் கூற என்னை அனுமதியுங்கள்!" நம்மை நாமே நியாயப்படுத்தவும் நாம் செய்கிறவற்றிற்கு (நமது சொந்த மனங்களில்) போதுமான "நியாயத்தை" கண்டறியவும் நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம். இயேசு பொதுவாகக் கோபத்திற்கு எதிராக ஒரு எச்சரிக்கையை வெளியிட்டார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இயேசு, "தன் சகோதரனை ... கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்று கூறினார். இவ்விடத்தில் "நியாயத்தீர்ப்புக்கு" என்ற வார்த்தை *krisis* ("நியாயத்தீர்ப்பு") என்பதில் இருந்து வந்துள்ளது, இதுவே முந்திய வசனத்திலும் வந்துள்ள வார்த்தையாக உள்ளது. இருப்பினும் கிறிஸ்து உலகப்பிரகாரமான நியாயத்தீர்ப்பில் இருந்து ஆவிக்குரிய நியாயத்தீர்ப்புக்குக் கடந்து சென்றார் என்பது தெளிவு, ஏனென்றால் உலகப்பிரகாரமான நீதிமன்றம் எதுவும், ஒருவர் கோபம் கொண்டதாலேயே அவரை விசாரிக்க இயலாது அல்லது விசாரிக்காது. *பரலோக* நீதிமன்றத்தில், ஒருவர் தமது சகோதரரைக் *கொலை செய்தால்* மாத்திரமல்ல, ஆனால் அவர் தமது சகோதரரிடம் *கோபம் கொண்டாலே* குற்றம் உள்ளவராக இருப்பார் என்று இயேசு கூறினார்.

இயேசுவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருசிலராவது, யாராவது ஒருவரை உடல்ரீதியாகக் கொலைசெய்திருப்பார் என்று நாம் யூகிக்கலாம்; சிலர் அனேகமாக, வெறுப்புணர்வைத் தங்கள் இருதயங்களில் தேக்கி வைத்திருக்கலாம். அவர்கள் அந்த வெறுப்புணர்வுக்குரியவர்கள் மீது பேரழிவு விழுந்தால் அதைப்பற்றிக் கண்ணீர் எதுவும் சிந்த மாட்டார்கள்: அவர்களைக் காட்டு மிருகங்கள் கொன்றால், அவர்களை விஷமுள்ள பாம்புகள் கடித்தால், அவர்களை மின்னல் தாக்கினால்.[12] அவர்கள் அனேகமாகத் தங்களின் கைகள் இரத்தத்தால் சிவக்காதிருந்தால், அவர்கள் ஆறாவது கட்டளையை மீறவில்லை என்று நம்பியிருக்கலாம்; ஆனால் இயேசு அது அப்படியல்ல என்று கூறினார். இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர், பின்னாளில் "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷகொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்" என்று எழுதினார் (1 யோவான் 3:15). இது "சிந்தனையில் கொலைசெய்தல்" என்று அழைக்கப்பட்டுள்ளது.[13]

இயேசு, கொலையின் பாவத்திற்குப் பின்னால் கொலையை விளைவிக்கக் கூடிய இருதயத்தின் எண்ணப்போக்கிற்குச் சென்றார். நம்மால் அநீதியான கோபத்தையும் வெறுப்புணர்வையும் நீக்கிப்போட முடியும் என்றால், நம்மால் கொலையையும் நீக்கிப்போட முடியும். மலைப்பிரசங்கத்தில் இருந்து நாம் பின்வரும் அடிப்படைக் கொள்கையை எடுக்க முடியும்: பாவத்திற்கு வழிநடத்தும் விஷயமும் பாவம் நிறைந்ததாக உள்ளது.

### வெளிப்படுத்தப்பட்ட கோபம் (வசனம் 22ஆ)

22ம் வசனத்தின் மத்தியில் இயேசு, *உணரப்பட்ட* கோபத்தில் இருந்து *வெளிப்படுத்தப்பட்ட* கோபத்திற்குக் கடந்த சென்றார்: "தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநகரத்துக்கு ஏதுவாயிருப்பான்." *Raca* என்பது, "வீணண்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையாக

உள்ளது. W. E. வைன் என்பவர், *raca* என்பது "[எபிரெய] வார்த்தையின் உறவுள்ள அரமேயிக் வார்த்தையாக உள்ளது. ... இது முற்றிலுமான விரோதத்திற்கு உரிய வார்த்தையாக உள்ளது, இது ஒழுக்கரீதியான 'வெறுமை' என்பதற்கு மாறாக புத்திக்கூர்மையில் 'வெறுமை' என்பதைக் குறிக்கிறது" என்று கூறினார்.[14] சில மொழிபெயர்ப்புகள் இவ்வார்த்தைக்குப் பொதுவானதொரு அணுகுமுறையை மேற்கொள்கின்றன. RSV வேதாகமத்தில் "தனது சகோதரனை அவமதிக்கிறவன்" என்றுள்ளது. NCV வேதாகமத்தில் "மோசமான விஷயங்களைக் [சகோதரனிடம்] கூறுகிறவன்'' என்றுள்ளது. மற்ற மொழிபெயர்ப்புகள் தனிவகையான அர்த்தங்களைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன. மெக்கார்டு மொழிபெயர்ப்பில் "வெறுமையான தலையுடைய" என்று இருக்கையில் NLT மொழிபெயர்ப்பில் "மதியீனன்'' என்றுள்ளது.

*Raca* என்ற வார்த்தை அவமானப்படுத்துதல் என்பதாக மாத்திரமல்ல, ஆனால் அது பேசப்படுகிற வகையையும் குறிப்பதாக இருக்கச் சாத்தியமுள்ளது. அந்த அளவுக்கு மதிப்புக் குலைவற்றதாக உள்ள பல சொற்றொடர்கள் பகை உணர்வுடன் பயன்படுத்தப்படும்போது ஆழமாகப் புண்படுத்தக் கூடும். *Raca* என்பதை, அந்த நாட்களில் திட்டுதலுக்குப் பயன்படுத்தப்பட்ட பொதுவான, குரலில் ஒரு விரோதமான தொனியுடன் பேசப்பட்ட சொற்றொடர் என்ற வகையில் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் வாழும் இடம் எதுவாக இருந்தாலும் அங்கு, மற்றவர்களை அவமதிக்கவும் மதிப்புக் குறைவாக்கவும் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் உள்ளன. (அவைகள் எவை என்று உங்களுக்குத் தெரியும், இல்லையா?) மனச்சாட்சியுள்ள ஒரு கிறிஸ்தவர் இதைப்போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது இல்லை, ஆனால் உலகப்பிரகாரமான சிந்தையுள்ளவர்கள் இதைப் பயன்படுத்துகின்றனர்.

இயேசுவைப் பொறுத்தமட்டில், தனது சகோதரனை *raca* என்று அழைக்கிறவன் ''ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்.'' "ஆலோசனைச் சங்கம்" என்பது பொதுவாக "சனதெரீன்" என்று நாம் உச்சரிக்கும் (*sunedrion* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. இவ்வார்த்தை அவ்வப்போது பொதுவான வகையில் பயன்படுத்தப்பட்டது (காண்க மத்தேயு 10:17), ஆனால் இது வழக்கமாக "71 உறுப்பினர்களைக் கொண்டிருந்த, எருசலேமின் மகா சபையாக இருந்தது ... இந்தத் தீர்ப்பாயத்திற்கு முன்பாகத்தான் மிகவும் முக்கியமான வழக்குகள் [விசாரணைக்கு] வந்தன."[15] பல நாடுகள், உள்ளூர் நீதிமன்றங்களையும் தேசிய நீதிமன்றத்தையும் கொண்டுள்ளன. இவற்றில் பிந்திக் குறிப்பிடப்பட்டது, அமெரிக்காவில் உயர்நீதிமன்றம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு சகோதரனை அவமதித்தமைக்காக எருசலேமில் எவரொருவரும் உயர்நீதிமன்றத்திற்கு [சனதெரீனுக்கு] முன்பாக [விசாரணைக்கு] கொண்டுவரப்படவில்லை என்பது உண்மையே. பின்பு இயேசு, சகோதரர் மீது ஒருவர் கோபமாயிருத்தலின் தீவிரக்கருத்தை மனதில் பதியச் செய்வதற்காக, நன்கு பழக்கமான சொற்றொடர்களை ஒரு உருவகமான வகையில் பயன்படுத்தத் தொடர்ந்தார். வேதவசனப் பகுதியில் வலிவார்ந்த தன்மை வளர்நிலையில் உள்ளது, இது ஒரு உள்ளூர் நீதிமன்றத்தில் இருந்து சனதெரீன் என்ற நீதிமன்றத்திற்குக் கடந்து செல்கிறது. *வெளிப்படுத்தப்பட்ட* கோபமானது *உணரப்பட்ட* கோபத்தைக் காட்டிலும் அதிகம் தீவிரமான விளைவுகளைக் கொண்டுள்ளது என்பதே மறைமுகமாக உணர்த்தப்பட்ட

கருத்தாக இருக்கிறது.

ஒருவேளை நான் எதிர்கொண்டுள்ள விசித்திரக் கவர்ச்சி கொண்ட விவாதத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். யாரேனும் ஒருவர், "ஒரு சகோதரரை வெறுத்தல் என்பது அவரைக் கொலை செய்வது போன்றே மோசமானதாக இருக்கிறது என்றால், நான் என் சகோதரரை வெறுத்தால், நான் அவரைக் கொலை செய்வதற்கும் முன்செல்வேன். எனது பாவம் தேவனுடைய பார்வையில் பெரிதாயிராது" என்று கூறுகிறார். வாசகர் எவரும் இவ்வகையான சிறுபிள்ளைத்தனமான நியாயம் கற்பித்தலில் ஈடுபட மாட்டார், ஆனால் ஒரு சில வார்த்தைகள் இங்கு முறையானவையாக இருக்கலாம். நடைமுறைக் கருத்தில், கோபத்தை (அவமதிக்கும் வார்த்தைகளில் மற்றும்/அல்லது கொலையில்) வெளிப்படுத்துதல் என்பது, இருதயத்தில் கோபம் கொண்டிருத்தலைவிட, பல காரணங்களுக்காக மிகவும் மோசமானதாக உள்ளது. அவற்றில் இரண்டு காரணங்களை நான் இங்கு குறிப்பிடுவேன். (1) நீங்கள் ஒரு சகோதரரிடம் கோபமாக இருந்தாலும், அவரை அவமதித்தல் அல்லது அவரைக் கொலை செய்தல் என்பவற்றைச் செய்யக்கூடாது, ஏனெனில் இந்த நடவடிக்கைகள் மனந்திரும்புதலை (மீளத்திருப்புதல் உட்பட மனந்திரும்புதல் என்பதை) மிகவும் கடினமாக்கி விடுகின்றன. இன்னொருவரைப் பற்றி நீங்கள் மோசமான சில விஷயங்களைக் கூறினால், அவரிடம் சென்று நீங்கள் அவருடன் ஒப்புரவாக வேண்டும் (காண்க வசனங்கள் 23, 24). நீங்கள் யாரேனும் ஒருவரைக் கொலை செய்து விட்டால், அவரது உயிரை ஒருக்காலும் நீங்கள் திரும்பத் தர இயலாது. (2) நீங்கள் ஒரு சகோதரரிடம் கோபமாக இருந்தாலும், நீங்கள் அவரைக் கொலை செய்துவிடக்கூடாது, ஏனெனில் அதன் விளைவுகள் பெரிதாக உள்ளன. நீங்கள் உங்கள் இருதயத்தில் வெறுப்புணர்வு அல்லது கோபம் கொண்டிருந்தால், நீங்கள் தேவனுக்குப் பதில்சொல்லியாக வேண்டும். நீங்கள் கொலை செய்தால், தேவனுக்குப் பதில் சொல்லியாக வேண்டுவதோடு, மனிதரீதியான நீதிமன்றத்திற்கும் நீங்கள் பதில்சொல்லியாக வேண்டும். இயேசுவின் கூற்றில் உள்ள வளர்நிலை வலிவார்ந்த தன்மையானது, சட்டரீதியான "விடுவிக்கும் ஓட்டைகளை" அளிப்பதற்கானவை அல்ல, ஆனால் அவைகள், நாம் ஒரு சகோதரர் மீது கோபம் கொண்டிருந்தால் அல்லது அவரை வெறுத்தால், அந்த எதிர்மறைச் சிந்தனைகளை நமது மனங்கள் மற்றும் இருதயங்களில் இருந்து எடுத்துப் போட வேண்டும் என்பதைக் கட்டளையாக உணர்த்துகின்றன.

வெளிப்படுத்தப்பட்ட கோபத்திற்கு இயேசு இன்னொரு உதாரணம் கொடுத்தார். தொடர்ந்து அவர், "மூடனே என்று சொல்லுகிறவன் எரிநகரத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்று கூறினார். மீண்டுமாக நாம், குற்றம் மற்றும் தண்டனை ஆகிய இரண்டிலுமே வலிவார்ந்த தன்மையைக் காணுகிறோம். "மூடன்" என்பது, *moros* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இதிலிருந்தே நாம் "moron" ("முட்டாள்") என்ற வார்த்தையைப் பெறுகிறோம். இவ்வார்த்தை, "அடிப்படையாக, 'மந்தமான, உணர்ச்சியற்ற' ஆகவே 'மதியற்ற, முட்டாளான' என்பதைக் குறிக்கிறது ... ; இவ்விடத்தில் இவ்வார்த்தை, ஒழுக்கரீதியாகத் தகுதியற்ற, மூடர் ஒருவரை அர்த்தப்படுத்துகிறது." இது "*raca* என்பதை விட மிகத்தீவிரமான அணுகுமுறையாக உள்ளது; பிந்திய இவ்வார்த்தை ஒரு மனிதரின் மனதைத் திட்டி அவரை மூடன் என்று அழைக்கிறது; *moros* என்பது அவரது இருதயத்தையும் பண்பையும் அவமதிக்கிறது."[16] இயேசு

*moros* என்ற வார்த்தையை, மாய்மாலக்காரர்களான வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் சபிக்கவும் (மத்தேயு 23:17, 19), கன்னிகைகளின் மதியீனத்தை விவரிக்கவும் (மத்தேயு 25:3) பயன்படுத்தினார். இவ்வார்த்தை ஒரு தனிநபரின் ஆவிக்குரிய நிலையைக் குறிப்பிடுகிறது. இவ்வகையான தீர்ப்பைக் கூற இயேசு தகுதியானவராக இருந்தார்,[17] ஆனால் நீங்களும் நானும் அவ்வாறு தகுதி கொண்டிருப்பதில்லை.

நான் இருதயத்தில் கோபமும் வெறுப்பும் கொண்டிருந்தால், அது "சிந்தனையில் செய்யும் கொலையாக" உள்ளது, இன்னொருவரிடம் அவமதிக்கும் வகையில் பேசுதல் என்பது "நாவினால் செய்யும் கொலையாக" உள்ளது.[18] நாம் நமது நாவுகளைக் கொண்டு, இன்னொருவரின் தன்னம்பிக்கையைக் கொலை செய்யக்கூடும். நாவைக் கொண்டு நாம் இன்னொருவரின் நற்பெயரைக் கொலை செய்யக்கூடும்.

கிறிஸ்தவர், மற்றவர்களை மரியாதையுடன் நடத்துகிறார் என்பது கிறிஸ்தவரின் ஒரு பண்பாக உள்ளது. அவர், மதிக்க அருகதையற்றவர்களைக்கூட மதிப்புடன் நடத்துகிறார். இது எங்கு கற்றறியப்படுகிறது? நம்மில் பலர் இதை ஒரு கிறிஸ்தவ இல்லத்தில் கற்றிருக்கிறோம். நீங்கள் ஒரு தந்தையாக அல்லது ஒரு தாயாக, ஒரு தாத்தாவாக அல்லது ஒரு பாட்டியாக இருந்தால், உங்கள் இல்லத்தில் உள்ள யாவரும் அங்குள்ள மற்றவர்களை மதிப்புடன் நடத்தும்படி வலியுறுத்துங்கள். ஒரு கிறிஸ்தவ இல்லத்தில், அற்பமான, வெறுப்பு நிறைந்த வார்த்தைகளுக்கு இடமில்லை.

மற்றவரை "மூடன் என்று அழைப்பவர் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பார்" என்று இயேசு கூறினார். "நரகம்" என்பது "ஹின்னோம் பள்ளத்தாக்கு" என்று அர்த்தப்படுகிற *gehenna* என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வந்துள்ளது.[19] இந்தப் பள்ளத்தாக்கில், ஆகாஸ் என்ற அரசரும் மற்றவர்களும், தங்கள் பிள்ளைகளைப் பொய்த்தேவர்களுக்குப் பலிசெலுத்தியிருந்தனர் (2 இராஜாக்கள் 16:3; 2 நாளாகமம் 28:3).[20] யோசியா அரசரானபோது, அவர் இந்தப் பள்ளத்தாக்கைத் தீட்டாக்கினார் (2 இராஜாக்கள் 23:10). அது குப்பைகளையும் குற்றவாளிகளின் பிணங்களையும் கொட்டும் இடமாக்கப்பட்டது (காண்க எரேமியா 7:31-33). பாரம்பரியத்தின்படி, முதல் நூற்றாண்டில் இது குப்பை கொட்டும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது, இதில் ஒருக்காலும் அணையாத புகையும் நெருப்பு கனன்று கொண்டிருந்தது.[21] இயேசுவின் உருவகத்தில், மற்றொருவரை "மூடன்" என்று அழைக்கும் வரையில், கோபமும் வெறுப்பும் தமது இருதயத்தில் புகைந்து எரிய அனுமதிக்கிறவர், என்றென்றும் எரிகிற அக்கினியின் புகை மற்றும் நெடிக்குள் தூக்கி எறியப்பட மாத்திரம் தகுதியானவராக இருந்தார்.

உடல்ரீதியான தண்டனையை விட அதிகம் தீவிரமான சிலவற்றை இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதை அவர் தமது உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அவரது நாட்களில், கெகன்னா என்பது, துன்மார்க்கர்களின் நித்திய இடத்திற்கான பொதுவான விவரிப்பாக இருந்தது, அதை நாம் "நரகம்" என்று அழைக்கிறோம் (மத்தேயு 10:28; 23:33). வெளிப்படுத்தின விசேஷம் 21:8ல் தேவன், கொலைகாரர்கள் "இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று கூறினார் - மற்றும் இயேசு, உணரப்பட்ட

மற்றும் வெளிப்படுத்தப்பட்ட கோபமானது உடல்ரீதியான கொலையைப் போன்றதாகவே இருக்கிறது என்று கூறினார்.

சிலர், "நான் எவரொருவரையும் 'வீணன்' என்றோ அல்லது 'மூடன்' என்றோ ஒருக்காலும் அழைக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருப்பேன், எனவே நான் சரியானவனாக இருப்பேன்" என்று கூறியுள்ளனர். இவ்வாறு நியாயப்படுத்துபவர்கள் இயேசு கூறியது என்ன என்பதை இன்னமும் புரிந்து கொள்ளாதவர்களாக உள்ளனர். "வீணன்" மற்றும் "மூடன்" என்பவை அவரது நாட்களில் மதிப்பற்ற வார்த்தைகளின் உதாரணங்களாக மாத்திரமே இருந்தன. மத்தேயு 5:21, 22ன் செய்தியானது நமது இருதயங்களில் இருந்து கோபமான சிந்தனைகளையும் நமது உதடுகளில் இருந்து கோபமான வார்த்தைகளையும் - *எவ்விதமான* கோபமான வார்த்தைகளையும் - நமது சக்தியால் புறம்பே எடுத்துப் போடுதலைப் பற்றிய எல்லாமுகமாக உள்ளது.

## விரைவாக ஒப்புரவாகுதலின் அவசியம் (5:23-26)

நாம் மிகச்சிறந்த நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், அடிக்கடி நமது சிந்தனைகளை அல்லது நமது நாவுகளைக் கட்டுப்படுத்துவது இல்லை என்பதை இயேசு உணர்ந்தறிந்தார் (காண்க யாக்கோபு 3:8). விஷயம் அப்படியாக இருக்கும் போது, நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனுடனும் மனிதருடனும் விஷயங்களை நேர்ப்படுத்திக் கொள்ளத்தாமதிப்பதில் நாம் நேரத்தைச் சிறிதும் இழக்கக் கூடாது என்பதே அவரது பதிலாக உள்ளது. நமது வேதபாட வசனப் பகுதியின் கடைசி இரு வசனங்கள், விரைவாக ஒப்புரவாகுதலின் அவசியத்தை அடிக்கோடிடுகின்றன.

### ஒரு சகோதரருடன் (வசனங்கள் 23, 24)

23ம் வசனத்தில் நாம், "ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், ..." என்று வாசிக்கிறோம். முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிட்டபடி, பழைய ஏற்பாடு இன்னமும் கட்டுப்படுத்தும் நிலையில் இருந்த வேளையில் மலைப்பிரசங்கம் பிரசங்கிக்கப்பட்டது; அது பழைய ஏற்பாட்டின் நடைமுறைகளுக்கு நன்கு பழக்கமான மக்களுக்கு உரைக்கப்பட்டது. ஆகவே இயேசு கூறியதைக் கவனித்துக் கேட்ட ஒரு யூதராக உங்களைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். பின்வரும் நிகழ்வு வரிசையை உங்கள் மனதில் சித்தரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேவாலயத்திற்குக் காணிக்கை ஒன்றை, ஒருவேளை பலிசெலுத்துவதற்கு ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் அந்த ஆட்டுக்குட்டியை எடுத்துக்கொண்டு, புறஜாதியாரின் முற்றத்தின் வழியாக, பெண்களின் முற்றத்தின் வழியாக, இஸ்ரவேல் மக்களின் முற்றத்தின் வழியாகக் கடந்து செல்கிறீர்கள். நீங்கள் கிராதிக்கு எதிராகச் சாய்ந்து, ஆசாரியர் அந்த ஆட்டுக்குட்டியை எடுத்துக் கொள்ளும்படி முன்னதாக நீட்டிப் பிடிக்கிறீர்கள். மிருகத்தின் தலையின் மீது கைகளை வைத்து ஒருவரின் பாவங்களை உச்சரித்து அவற்றைப் பலிசெலுத்தப்பட உள்ள ஆட்டுக் குட்டியின் மீது அடையாளத்துவமாக மாற்றுதல் என்பது ஒரு பொதுவான காட்சியாக இருந்தது. நீங்கள் அதைச் செய்கையில், உங்களால் கூறப்பட்ட சில வார்த்தைகளினால் (அல்லது நீங்கள் கூறியதாக அவர்

நினைத்ததால்[22]) மனம் புண்படுத்தப்பட்ட ஒரு சகோதரரைப் பற்றி நீங்கள் கேள்விப்படுகிறீர்கள்.

விஷயம் அப்படி இருக்கும்போது, "அங்கேதானே பலிபீடத்தின் முன் [ஆசாரியர் அல்லது லேவியரின் கண்காணிப்பில்] உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி," என்று இயேசு கூறினார் (வசனம் 24அ). "ஒப்புரவாகி இருக்க வேண்டுமா"? ஒப்புரவாகுதலைக் கொண்டுவர நாம் என்ன செய்ய வேண்டும்? ஆல்பர்ட் பேர்னஸ் என்பவர் பல கருத்துக்களைக் கொடுத்தார்:

> நீங்கள் அவருக்குத் தவறு இழைத்திருந்தால், இழப்பீடு செய்யுங்கள். நீங்கள் அவருக்குச் செலுத்த வேண்டிய கடன் ஒன்று இருந்தால், அதைச் செலுத்துங்கள். நீங்கள் அவரது பண்பைச் சிதைத்திருந்தால், அதை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேளுங்கள். உங்களைப் பற்றி அவர் ஒரு தவறான மனக்கருத்தில் இருந்தால், உங்கள் நடக்கையானது அவர் மனதைக் காயப்படுத்தியதாக அவர் சந்தேகிக்கும்படி வழிநடத்தியிருந்தால், ஒரு விளக்கம் கூறுங்கள். விஷயத்தை நேராக்குவதற்கு *உங்கள் சக்தியில் முடிந்த யாவற்றையும்*, நீங்கள் *செய்ய வேண்டிய யாவற்றையும்* செய்யுங்கள்.[23]

நமது வேதபாட வசனப் பகுதியில் இயேசு, *மனதைப் புண்படுத்தியவருக்கு* (உண்மையான அல்லது கற்பனை செய்யப்பட்ட) அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார். பிந்திய ஒரு சந்தர்ப்பத்தில் அவர் *மனம் புண்பட்டவருக்கு* அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார்: "உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்" (18:15). மனதைப் *புண்படுத்தியவர்* தமது சகோதரரிடத்தில் செல்ல வேண்டும் மற்றும் மனம் *புண்படுத்தப்பட்டவர்* தமது சகோதரரிடத்தில் செல்ல வேண்டும். அவர்கள் இருவருமே தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்தால், அவ்விருவருக்கும் இடையில் ஒரு மகிழ்ச்சியான சந்திப்பு ஏற்படும் - இதை லேரி கால்வின் என்பவர், "அன்பின் மோதல்" என்று முன்வைத்தார்.[24] இவ்விருவரில் யாரேனும் ஒருவர், தாம் செய்ய வேண்டியதைச் செய்யாது இருந்தால் என்னவாகும்? அது மற்றவருக்கு ஒரு சாக்குப்போக்காக இராது. நீங்கள், "நல்லது, அவர் *என்னிடத்தில்* வந்திருக்க வேண்டும்" என்று கூற முடியாது. *நீங்கள்* உங்கள் சகோதரர் அல்லது சகோதரியிடம் "செல்வது" மற்றும் "ஒப்புரவாகுதலுக்கு" அவசியமான *உங்களால்* இயன்ற எல்லாவற்றையும் செய்வது அவசியம் என்று இயேசு கூறினார்.

நீங்கள் அதைச் செய்த பிற்பாடு, "*பின்பு* வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்று இயேசு கூறினார் (5:24ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இவ்வார்த்தைகளைப் புதிய ஏற்பாட்டின் செயல்முறைகளுக்கு நடைமுறைப்படுத்துதல் கடினமானதல்ல. நீங்கள் ஆராதனைக்கு வந்து பாவங்களை மன்னிக்கும்படி தேவனிடத்தில் கேட்பதற்காக உங்கள் தலையை வணங்கும்போது, உங்கள் சகோதரர் அல்லது சகோதரி உங்களுக்கு எதிராகச் சிலவிஷயங்களைக் கொண்டிருப்பது உங்கள் நினைவுக்கு வந்தால், ஜெபிப்பதை நிறுத்துங்கள். "போய், முதலில் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியுடன் ஒப்புரவாகுங்கள்." பின்பு திரும்பி வந்து உங்கள் ஜெபத்தை

*முடியுங்கள். கர்த்தருடைய பந்தியின்போது - உங்கள் பாவங்களுக்காக இயேசு மரணம் அடைந்ததை நீங்கள் நினைக்கையில் - நீங்கள் உங்கள் சகோதரர் அல்லது சகோதரிக்கு எதிராகப் பாவம் செய்திருக்கிறீர்கள் என்று நீங்கள் நினைவுகூர்ந்தால், அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியேறி அந்த சகோதரர் அல்லது சகோதரியுடன் ஒப்புரவாகுங்கள். பின்பு திரும்பி வந்து கர்த்தருடனும் மற்ற கிறிஸ்தவர்களுடனும் உங்கள் ஐக்கிய விருந்தில் கலந்து கொள்வதைச் செய்து முடியுங்கள்.*

*ஆண்டுகளினூடே நான், பல்வேறு காரணங்களுக்காக ஆராதனை கூட்டங்களை விட்டு வெளியேறும் மக்களைக் கண்டிருக்கிறேன், அவற்றில் சில காரணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக உள்ளன மற்றும் சில காரணங்கள் கேள்விக்குரியவையாக உள்ளன: மருந்து எடுத்துக் கொள்வதற்காக, அடங்காத பிள்ளைகளை வெளியே இட்டுச் செல்வதற்காக, அவர்கள் சுகவீனமாக இருப்பதினால், அவர்கள் கட்டாயமான வேலை ஒன்றைக் கொண்டிருப்பதினால், அல்லது சிலர் பிரசங்கத்தை விரும்பாது இருப்பதினால். நான் அறிந்த வரையில், ஒரு சகோதரர் அல்லது சகோதரியுடன் ஒப்புரவு ஆவதற்காக எவரொருவரும் வெளியேறிச் சென்றதை நான் ஒருக்காலும் கண்டதில்லை. J. W. மெக்கார்வீ என்பவர் இதை, "அடிக்கடி முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படும் ஒரு கடமை" என்று அழைத்துள்ளார்.[25]*

*மனம் புண்படுத்தப்பட்ட ஒரு சகோதரருடன் ஒப்புரவாகுதலின் அவசரத் தேவை என்பதே 23 மற்றும் 24ம் வசனங்களின் தெளிவான செய்தியாக உள்ளது. மற்ற செய்திகளும் நமது கவனத்தைக் கூவி அழைக்கின்றன. எடுத்துக்காட்டாக, சபைக்குச் செல்லுதல் என்பது தேவன் கட்டளையிட்டுள்ளவற்றை செய்தலுக்குப் பதிலியாக இருக்க முடியாது (1 சாமுவேல் 15:22ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்). ஒரு சகோதரருடன் நமக்குள்ள உறவானது தேவனுடன் நமக்குள்ள உறவின்மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பது இன்னொரு வலிவான பாடமாக உள்ளது. யோவான், "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" என்று எழுதினார் (1 யோவான் 4:20).*

***எதிராளியுடன் (வசனங்கள் 25, 26)***

*நமது வேதபாட வசனப் பகுதியில் 25 மற்றும் 26ம் வசனங்களில் இயேசு, உடனடியான ஒப்புரவாகுதலின் தேவையைக் குறித்து இரண்டாவது உதாரணத்தைப் பயன்படுத்தினார். இவ்வசனங்களில் அவர், 22ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்ட சட்டரீதியான உருவகத்தைத் திருப்பினார். அவர், "எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும்" என்று தொடங்கினார் (வசனம் 25அ). "நியாயாதிபதியினிடத்தில்" என்பது antidikos என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இந்த சந்தர்ப்பப் பொருளில், இது "வழக்குத் தொடர்ந்திருக்கும் ஒரு எதிராளி" என்பதைக் குறிக்கிறது.[26] இந்த விவரிப்பில் வழக்கானது, அடைக்கப்பட வேண்டிய கடன் அல்லது குறைந்த பட்சம் அடைக்கப்பட வேண்டிய கடன் என்று எதிராளி நினைக்கும் கடனைப் பற்றியதாக உள்ளது (காண்க வசனம் 26).*

*இயேசு, "நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய்*

அவனுடனே நல்மனம் பொருந்து" என்று கூறினார் (வசனம் 25இ). கிரேக்க வசனத்தில் இது நேரடியாக, "எதிராளியுடன் வழக்கைத் தீர்த்துக்கொள்" என்றுள்ளது.[27] நீங்கள் நல்மனதை அவரிடம் நீட்டிப்பதன் மூலம் அவரது நல்மனதை நாட வேண்டும் என்பதே மறைமுகமான கருத்தாக உள்ளது.[28] இவ்வார்த்தைகள் அவருடன் விஷயத்தைத் தீர்த்துக்கொள்ளுதல் என்பதையே அடிப்படையில் குறிப்பிடுகின்றன (NIV வேதாகமத்தில் காணவும்), ஆனால் ஒரு எதிராளியை ஒரு நண்பராக்கிக் கொள்ளுதல் என்பது நாம் கொண்டிருக்க வேண்டிய நல்லதொரு இலக்காக உள்ளது (காண்க வசனம் 44).[29] உங்கள் எதிராளி ஒருக்காலும் உங்கள் மிகச்சிறந்த நண்பராக இராதுபோகலாம், ஆனால் அப்போதும் நீங்கள் அவருடன் சமாதானம் செய்து கொள்ள முயற்சி செய்வது அவசியமாக உள்ளது.

"வழியில் இருக்கும்போதே" என்பது "நீதிமன்றத்திற்குச் செல்லும்-வழியில் இருக்கும்போதே" என்று அர்த்தப்படுகிறது. ஒரு சிறு நகரத்தில் இது நேரடியாகவே நடைபெற முடியும். இருசாராரும் நீதிமன்ற விசாரணைக்கு நடந்து செல்லுகையில், அவர்கள் ஒரே தெருவில் சந்திக்க முடியும். இது நேரடியான விஷயமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், விசாரணைக்கான நேரம் நெருங்கி வருகையில், குற்றம் சாட்டப்பட்டவர் இவ்விஷயத்தை நீதிமன்றத்திற்கு வெளியிலேயே தீர்த்து வைக்கத் தமது முயற்சிகளை வலுப்படுத்துதல் அவசியமானது.

"சீக்கிரமாய்" என்பது இவ்வசனத்தில் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. (சகோதரராக இருந்தாலும் அல்லது எதிராளியாக இருந்தாலும்) இன்னொருவருடன் எதிர்க்கருத்துக்கள் உள்ளபோது, காத்திருக்காதீர்கள். தயங்காதீர்கள்; உடனடியாக ஒப்புரவாகுங்கள். உங்களுக்கும் வேறு ஒருவருக்கும் இடையில் மோசமான உணர்வுகள் நிலவுகிறபோது, இயன்றவரையில் விரைவாக அவரை "நண்பராக்கிக் கொள்ளுங்கள்."

"எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக" நீங்கள் விஷயத்தை விரைவாகத் தீர்த்துக் கொள்ளுதல் அவசியம் என்று இயேசு கூறினார் (வசனம் 25அ, ஆ). "சேவகன்" என்பது நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற நியமிக்கப்பட்டவரைக் குறிக்கிறது. அந்த நாட்களில் மக்கள் தாங்கள் பட்ட கடனைச் செலுத்தத் தவறும்போது அவர்கள் சிறையில் அடைக்கப்பட முடிந்திருந்தது.

"நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்கும்மட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய்" என்று "மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என இயேசு கூறினார் (வசனம் 26). "ஒரு காசும் குறைவின்றி" என்பது ரோம நாணயத்தின் மிகசிறு மதிப்பான *குவாட்ரன்* என்பதாக இருந்தது.[30] செலுத்தப்படாத கடனுக்காகச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் - அவர்களின் குடும்பத்தார், நண்பர்கள் அல்லது வேறு யாராலாவது - அந்தக் கடன் செலுத்தப்படும் வரையிலும் சிறையில் இருக்க வேண்டியிருந்தது.[31]

25 மற்றும் 26ம் வசனங்களில் இருந்து ஒருவேளை நாம், சாத்தியப்பட்டால் நீதிமன்றத்திற்குச் செல்லாது இருத்தலுக்கான நடைமுறைப் பயன்பாடு ஒன்றை எடுக்க முடியும். மற்றொரு சந்தர்ப்பத்தில் இயேசு இதே வார்த்தைகளை,

இன்னும் அதிக நேரடி நடைமுறைக்குப் பயன்படுத்தினார் (காண்க லூக்கா 12:57-59). 25 மற்றும் 26ம் வசனங்களில் ஒரு சிலர், உருவகம் ஒன்றைக் கூட கண்டிருக்கின்றனர். நாம் யாவரும் வாழ்வின் சாலையில் நியாயத்தீர்ப்பு தரப்படும் நீதிமன்றம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். அதே சாலையில், நாம் கருத்து வேறுபாடு கொண்டுள்ள மற்றவர்களும் நம்முடன் வந்துகொண்டிருக்கின்றனர். நமது வாழ்வு முடியுமுன்னர் (காண்க யாக்கோபு 4:14) மற்றும் வாய்ப்பு கடந்து செல்லும் முன்னர், நாம் அந்த வேறுபாடுகளை உடனடியாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இருப்பினும், இந்த விவரிப்பின் நாடகத்துவமான கருத்துக்களினால் வழிவிலக்கப்படாது இருங்கள். இயேசுவின் கருத்து, பற்றிக்கொள்ள சுலபமானதாக உள்ளது: சூழ்நிலை எதுவாக இருந்தாலும், நீங்கள் மற்றவர்களுடன் இணக்கமாக இராதபோது, "சீக்கிரமாக" ஒப்புரவாகுங்கள். அதை என்னால் முடிந்த அளவு பலமாகக் கூற என்னை அனுமதியுங்கள்: சீக்கிரமாக ஒப்புரவாகுங்கள். நம்மில் பலர், இன்னொருவருடன் கருத்து வேறுபாடு உள்ளபோது அவரிடத்தில் செல்லத் தாமதப்படச் சாய்கிறோம் என்பது உண்மையல்லவா? மகிழ்ச்சியற்ற தன்மையின் சாத்தியக்கூறு ஏதேனும் இருந்தால், நாம் செல்லாது இருந்து விடுகிறோம். இதன் விளைவாக, விஷயமானது சீழ்வைத்துப் போகிறது, மற்றும் அடிக்கடி அது ஏறக்குறைய பழுதுநீக்க இயலாத பிளவாகி விடுகிறது. இது உண்மை என்பதை நீங்கள் அறிகிறீர்கள். இருப்பினும் *சீக்கிரமாய்* நாம் அதுபற்றிச் செயல்பட்டால், விஷயமானது வழக்கமாகத் தீர்க்கப்படுவதாக உள்ளது.[32]

ஒரு ஓக் மரத்தைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்த மரத்திலிருந்து கொட்டைகள் விழுகின்றன, அவற்றில் சில முளைக்கின்றன. அந்த மரக்கன்றுகள் சிறியவையாக இருக்கும்போது, அவற்றை மண்ணிலிருந்து சுலபமாக பரித்தெடுக்க முடிகிறது; ஆனால் அவைகள் அவ்வாறு பரித்து எடுக்கப்படவில்லை என்றால், கடைசியில் அவைகள் பெரிய ஓக் மரங்களாக வளர்ந்து விடும். அவ்வாறு நடைபெற்றபின்பு அவற்றை பறித்தெடுத்தல் சாத்தியமற்றதாக உள்ளது. அவற்றை வெட்டி எடுக்க மாத்திரமே முடியும், அவைகள் அப்போது மண்ணில் ஊறுஉண்டாக்கும் வகையில் கனத்த வேர்களைக் கொண்ட ஒரு அடிக்கட்டையை விட்டுச் செல்லும். கருத்து வேற்றுமை எழுகிற போது, கசப்புணர்வு வேரூன்ற வாய்ப்புக் கொடுத்து விடாதீர்கள். மாறாக, எதிராளியிடம் சீக்கிரமாகச் சென்று, எல்லாக் கருத்து வேற்றுமைகளையும் விரோதத்தையும் சாத்தியமானால் உடனடியாக நீக்கிப் போடுங்கள். "உங்கள் எதிராளியை *சீக்கிரமாக* நண்பராக்கிக் கொள்ளுங்கள்."

## முடிவுரை

ஆறாவது கட்டளை, "கொலை செய்யாதிருப்பாயாக" என்று கூறிற்று; ஆனால் நீங்கள் மற்றவர்களைக் குறித்து பொல்லாத உணர்வுகளைக்கூடத் தேக்கி வைக்கக் கூடாது என்று இயேசு கூறினார். நீங்கள் உங்கள் இருதயத்தில் இருந்து கோபத்தையும் வெறுப்புணர்வையும், உங்கள் உதடுகளில் இருந்து இரக்கமற்ற வார்த்தைகளையும் நீக்கிப்போட வேண்டும். மேலும் நீங்கள் யாருடனாவது மனமுறிவு கொண்டிருந்தால், உங்களால் இயன்ற மட்டும் விரைவில் அவருடன் ஒப்புரவாக வேண்டும். நமது படிப்பின் போது நீங்கள் உங்கள் இருதயத்தையும் செயல்களையும் பரிசோதித்தீர்களா? நம்மில்

எவராவது, மோசமான உணர்வுகளை நமது இருதயங்களில் ஒருக்காலும் தேக்கிவைத்ததில்லை, அற்பமான அசுத்தமான விஷயங்களை ஒருக்காலும் கூறியதில்லை, நாம் மனம்புண்படுத்திய நபர்களிடம் எப்போதுமே விரைவாகச் சென்றிருக்கிறோம் என்று கூறமுடியுமா?

நமது வேதபாட வசனப்பகுதியில் இயேசு, உங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுடன் நீங்கள் கொண்டுள்ள உறவானது, தேவனுடன் நீங்கள் கொண்டுள்ள உறவின் மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெளிவாக்கினார். தேவனுடன் உங்கள் உறவு எப்படிப்பட்டதாக உள்ளது? உங்களுக்கும் அவருக்கும் இடையில் ஒரு தடை இருப்பதாகக் காணப்படுகிறதா? அது ஒருவேளை, உங்களுக்கும் கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரர் அல்லது சகோதரிக்கும் இடையில் ... அல்லது உங்களுக்கும் ஒரு குடும்ப உறுப்பினருக்கும் இடையில் ... அல்லது உங்களுக்கும் ஒரு அயலகத்தவருக்கும் இடையில் ... அல்லது உங்களுக்கும் நீங்கள் பணியாற்றும் அல்லது படிக்கும் இடத்தில் உள்ள யாரேனும் ஒருவருக்கும் இடையில் ... உள்ள தடையின் காரணமானதாக இருக்கலாம். விஷயம் அப்படியிருந்தால், போய் ஒப்புரவாகுங்கள். பின்பு வந்து உங்கள் வாழ்வைப் பரலோகத்தில் உள்ள பிதாவுக்குப் பலியாகச் செலுத்துங்கள்.

---

குறிப்புகள்

[1]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 130. [2]KJV வேதாகமத்தில் "பழங்காலத்தில் உள்ளவர்களால் கூறப்பட்டது" என்றுள்ளது. "பழங்காலத்தில்" அல்லது "பூர்வ காலத்தில் உள்ளவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர் ஒரு முன்னிடைச் சொல் தேவைப்படுகிற நான்காம் வேற்றுமைத் தொகையாக உள்ளது. கிரேக்க வசனத்தில் முன்னிடைச் சொல் எதுவும் இல்லை, எனவே ஒரு முன்னிடைச் சொல் தரப்படவேண்டியதாக உள்ளது, வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் "ஆல்" என்ற முன்னிடைச் சொல்லை கொடுத்தனர், அதே வேளையில் மற்ற பல மொழிபெயர்ப்புகள் "க்கு" அல்லது அதற்கு இணையான ஒரு முன்னிடைச் சொல்லை உட்செருகி இருக்கின்றனர். இவற்றில் எந்த மொழிபெயர்ப்பும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகவே உள்ளது. "ஆல்" பயன்படுத்தப்பட்டால், "பூர்வத்தார்" என்பவர்கள் கடந்த காலத்தில் வாழ்ந்த யூதப் போதகர்களாக இருந்தனர். [3]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 342. [4]*The American Heritage Dictionary*, 4th ed. (2001), s.v. "murder." [5]Vine, 337. [6]ரோமர் சட்டத்தின்படி, ஒரு யூத நீதிமன்றம் மரண தண்டனையைச் செயல்படுத்த இயலாததாக இருந்தது. ரோமர்கள் அந்த உரிமையைத் தங்களுக்கென்று வைத்துக் கொண்டிருந்தனர். இருப்பினும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்க யூத நீதிமன்றங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. [7]இந்த சந்தர்ப்பப் பொருளில், "சகோதரன்" என்பது ஆண் மற்றும் பெண் என்ற இருவரையும் குறிக்க பொதுவான கருத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. [8]Vine, 26-27. [9]Barclay, 135-36. [10]William Evans, "Wrath," *The International Standard Bible Encyclopedia,* ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 5:3113.

[11]சிலர், "இவ்வார்த்தை, கொள்கையின் இறுக்கத்தை மென்மைப் படுத்துவதற்காக,

*பிரதியெடுத்தவர்களால் கூட்டப்பட்டது"* என்று நினைக்கின்றனர் (Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament* [New York: United Bible Societies, 2001], 13). [12]Adapted from Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 61. [13]Frank L. Cox, *Sermon Notes on The Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 13. *மத்தேயு 15:19ல் இயேசு, "பொல்லாத சிந்தனைகள்" மற்றும் "கொலைகள்" ஆகியவற்றை ஒன்றாகப் பிணைத்தார்.* [14]Vine, 504. [15]Ibid., 132. [16]Ibid., 246. [17]*இயேசு மக்களின் இருதயங்களை அறிந்திருந்தார் (காண்க யோவான் 2:25), மற்றும் அவர் மாம்சத்தில் வந்த தேவனாக இருந்தார் (மத்தேயு 1:23; யோவான் 1:14).* [18]Cox, 13. [19]*இந்த பள்ளத்தாக்கு - "ஹின்னோனின் மகனுடைய பள்ளத்தாக்கு" என்று அர்த்தப்படும் வகையில், "பென் - ஹின்னோம் பள்ளத்தாக்கு" என்றும் அழைக்கப்படுகிறது - யோசுவா 15:8; 18:16; நெகேமியா 11:30 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.* [20]*"தீக்கடக்கப் பண்ணுதல்" என்பது, பலியாக நெருப்பில் இடுதல் என்று அர்த்தப்படுகிறது. அதிர்ச்சியூட்டும் இந்த நடைமுறை பற்றிய வரைவளவான ஒரு விவரிப்பு* Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 53 *என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.*

[21]Adapted from D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 149. [22]*பலிசெலுத்துபவர் தவறியுள்ளார் என்று இவ்வசனப்பகுதி மறைமுகமாய் உணர்த்துகிறது, ஆனால் இதை உரைப்பதில்லை. ஒருவர் தவறியிரா விட்டாலும், மனம் புண்பட்டுள்ள சகோதரருடன் ஒப்புரவாகுவதற்கு அவர் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதால் இது முக்கியமற்ற கருத்தாக உள்ளது.* [23]Barnes, 54. [24]Adapted from Larry Calvin, *The Power Zone* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 64-66. [25]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 55. [26]Vine, 15. *"நியாயப்பிரமாணத்திற்கு விரோதியாக" என்பதற்கு பதிலாக* KJV*ல் "எதிரி" என்றுள்ளது.* [27]Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament,* 2nd ed. (London: Samuel Bagster & Sons, 1958), 12. [28]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1976), 137. [29]*"ஒரு எதிராளியை அழிப்பதற்கு அவரை நண்பராக்கிக் கொள்ளுதலே மிகச்சிறந்த வழியாக உள்ளது" என்று ஆபிரகாம் லிங்கன் கூறினார்* (http://www.quoteworld.org/quotes/8335; Internet; accessed 30 May 2008). [30]*ஒரு குவாட்ரன் என்பது தினேரியஸ் என்பதின்* $^1/_{64}$ *பகுதியாக இருந்தது. இந்த குவாட்ரன் என்பது தேவாலயக் காணிக்கைப் பெட்டியில் ஏழை விதவை இட்ட தொகைக்குச் சமமானதாக இருந்தது (மாற்கு 12:42).* (Vine, 227.)

[31]*26ம் வசனம், "எடுத்துரைப்பு வலைப் பின்னலின் பகுதியாக உள்ளது என்பதையும் அது உத்தரிப்பு ஸ்தலம் என்பதற்கான நியாயப்படுத்துதலைத் தருவதில்லை என்பதையும்" கவனியுங்கள்* (Carson, 150). [32]*நாம் சீக்கிரமாகச் சென்றாலும், எப்போதுமே தீர்வு ஒன்று இருப்பதில்லை; ஆனால் நம்மால் இயன்றதைச் செய்தோம் என்று நாம் அறிவது அவசியமாக உள்ளது (காண்க ரோமர் 12:18).*